# News Release

# பனிக்காலத்துக்கு நாங்கள் தயார்! நீங்கள்?

*எங்கள் செயல்பாடுகள் குறித்தும் நீங்கள் வகிக்கும் முக்கியப் பாத்திரம் குறித்தும் மேலும் அறிந்துகொள்ளுங்கள்*

**வாகன், ஒன் (நவ. 1, 2024) -** வாகன் நகரத்தின் பொதுப் பணிக் குழு பனிப்பொழிவுக்கு வெகு முன்னதாகவே பனிக்காலத்துக்குத் தயாராகி வருகிறது. முதல் பனித்தூறலுக்காக நாங்கள் தயாராகிவரும் வேளையில் சமூகப் பாதுகாப்பு, தகவல் கொடுத்தல் மற்றும் பனிக்காலம் முழுவதும் இட நகர்வு ஆகியவை எங்கள் தலையாய முன்னுரிமைகளாகும்.

சாலைகள், பாதைகள், ஓர நடைபாதைகள் அல்லது சாலையோரத் தடுப்புகள் ஆகியவற்றிலிருந்து நாங்கள் பனித்திரளையும் பனிக்கட்டியையும் அகற்றும்போது வானிலை எந்த நிலையில் இருந்தாலும் வாகன் முழுவதும் ஒவ்வொருவரும் பத்திரமாகப் பயணிப்பதை உறுதிசெய்ய எங்கள் அணியினர் கடுமையாகப் பணிபுரிகின்றனர். 2,200 கிலோமீட்டருக்கும் நீளத்துக்கும் அதிகமான சாலைகள், 1,200 கிலோ மீட்டருக்கும் அதிகமான ஓர நடைபாதைகள், பூங்கா நடைபாதைகள், நகரத்துக்குச் சொந்தமான 63 கட்டிடங்களுக்குச் சேவைபுரிய 230 வாகனங்களின் அணிவரிசை நிலைநிறுத்தப்பட்டுள்ளன.

வாகனில் உள்ளூர் மற்றும் பிராந்தியச் சாலைகள் உள்ளன. நமது சாலை வழித் தொடர்புகள் பத்திரமாகவும் தெளிவாகவும் இருப்பதை உறுதிசெய்ய பனிக்காலம் முழுவதும் நகரம் யார்க் பிராந்தியத்துடன் நெருக்கமாகப் பணிபுரிகிறது. இந்த **நகரம்** வாகன் முழுவதிலுமுள்ள நகராட்சி சாலைகளுக்குப் பொறுப்புடையது. **யார்க் பிராந்தியம்** வாகனில் உள்ள மேஜர் மெக்கன்சி டிரைவ், ரூதர்ஃபோர்டு சாலை, பாதர்ஸ்ட் தெரு, கீல் தெரு, டஃபரின் தெரு போன்ற பிராந்தியச் சாலைகளுக்குப் பொறுப்புடையது. பிராந்தியச் சாலைகளுக்கான முழுப் பட்டியலுக்கு, york.ca பார்வையிடவும்.

இந்த நகரம் பின்வருவன உள்ளிட்ட பல்வகை பனிக்கால பராமரிப்புச் சேவைகளை வழங்குகிறது:

**பனியுறைவு எதிர்ப்பு**

பனிப்பொழிவு அல்லது புயலுக்கு முன்பாக, கருப்பு பனிக்கட்டி உருவாவதைத் தடுக்க மேற்பரப்பின்மீது உப்புக்கரைசல் தெளித்து இந்த நகரம் சாலைகளைத் தயார் செய்கிறது. உப்புக் கரைசல் என்பது கல் உப்பும் நீரும் கலந்த திரவம். இது ஒரு தடையாக உடனடியாகச் செயல்பட்டு பல நாட்களுக்கு சாலையில் செயல்நிலையில் இருக்கும். இதனால் பனிப்பொழிவு சாலையில் ஒட்டாமல் வழுக்கும் நிலையும் தவிர்க்கப்படுகிறது.

பனியுறைவு எதிர்ப்பு டிரக் செயல்படுவதைக் காண
இந்தக் காணொளியைப் பார்க்கவும்.

**உப்பிடல்**
பனிப்பொழிவு அல்லது பனிக்கட்டி சேர்வதை நிவர்த்திக்க சாலைகளிலும் ஓர நடைபாதைகளிலும் உப்பு இடப்படுகிறது. இந்த நகரம் விருது பெற்ற மெயின்டெனன்ஸ் டெசிசன் சப்போர்ட் சிஸ்டம் (MDSS) என்ற செய்யறிவு அடிப்படையிலான கருவியைப் பயன்படுத்துகிறது. இது ஒவ்வொரு பனிக்காலப் புயலுக்கும் தேவையான சரியான உப்பின் அளவைப் பயன்படுத்த நம் இயக்குவோருக்கு உதவுகிறது.

இந்தப் புதுமையான தொழில்நுட்பத்தை 2018 முதல் சுவீகரித்துக் கொண்டுள்ளதால், இந்த நகரம் ஒவ்வொரு உப்பிடல் நிகழ்விலும் 100 டன்களுக்கு மேலாக உப்புப் பயன்பாட்டைக் குறைத்துள்ளது. வெள்ளநீர் அமைப்புக்குள் நுழையக்கூடிய உப்பின் அளவை இது குறைப்பதால் இந்த அமைப்பு நகரப் பணத்தை மிச்சப்படுத்துகிறது. இது சுற்றுச்சூழலுக்கும் பயனளிக்கிறது - இதைத் தொடர்ந்து நீர்நிலைகள் - தாழ்நிலைகளில் சென்றடைகின்றன. இந்தத் தொழில்நுட்பத்தை உப்பிடும் செயல்பாடுகளில் கனடாவில் அமல்படுத்திய முதல் நகராட்சியாக வாகன் உள்ளது.

உப்பிடல் டிரக் செயல்படுவதைக் காண இந்தக் காணொளியைப் பார்க்கவும்.

**பனியகற்றல்**
ஐந்து சென்டிமீட்டர் அளவுக்கு (இரண்டு அங்குலங்கள்) பனி சேர்ந்தவுடன் பனியகற்றல் தொடங்குகிறது. பனிப்பொழிவு முடிந்த 16 மணிநேரத்துக்குள் அனைத்து நகராட்சி சாலைகளிலும் பனியகற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். அவசர நிலைக்காகவும் குடியிருப்புப் பகுதிக்குள் செல்வதற்கு முன்பாக வாகனங்கள் கடந்து செல்வதற்காகவும் பிரதான சாலைகளை இடையூறின்றி வைத்திருக்க அவற்றில் முதலில் பனியகற்றப்படுகின்றன. முக்கியச் சாலைகள் பனிப்பொழிவுக்குப்பின் **நான்கு மணி நேரத்துக்குள்** முடிக்கப்பட்டு குடியிருப்புச் சாலைகள் **12 மணிநேரங்களுக்குள்** முடிக்கப்படுகின்றன.

நகரப் பனியகற்றல் செயல்படுவதைக் காண இந்தக் காணொளியைப் பார்க்கவும்.

**சாலையோரத் தடுப்பு பனியகற்றுதல்**
சாலையோரத் தடுப்பு பனியகற்றுதல் சேவையை அனைத்து வீடுகளுக்கும் நகரம் வழங்குகிறது. ஒரு கார் செல்லுமளவுக்கு வாகன நுழைவுப் பாதையின் ஒரு பகுதியில் பனி அகற்றப்படுகிறது. பனியகற்றல் முடிந்தபின் **நான்கு மணி நேரங்கள்வரை** இது நடைபெறும். குறைவான அளவு மற்றும் சாலையோரத் தடுப்பு பனியகற்றும் எந்திரங்கள்

எட்டுமளவு காரணமாக இவற்றால் ஒருபகுதி பாதை நுழைவாயிலின் ஒரு பகுதியை மட்டுமே அகற்ற முடியும் - **எஞ்சிய பனி அப்படியே விடப்படலாம்.** நகரத்தின் சாலையோரத் தடுப்புச் சேவை ஓர நடைபாதை பனியகற்றலில் விடுபட்ட பனியையும் கடினப்பட்டுப்போன பனியையும் பனிக்கட்டி அல்லது ஒட்டுமொத்த வாகன வழிப்பாதையையும் அகற்றாது என்பதையும் நினைவில் கொள்ளவும்.

நகர சாலையோரத் தடுப்பு பனி அகற்றல் எந்திரம் செயல்படுவதைக் காண இந்தக் காணொளியைப் பார்க்கவும்.

**நமது பனிக்காலச் செயல்பாடுகள் இலகுவாக இயங்க நீங்கள் உதவமுடியும்!**
பனிக்கால மாதங்களில் நம் நகரத்தைப் பத்திரமாகவும் போக்குவரத்துக்கு இடையூறின்றி இருக்கவும் நாம் அனைவரும் பங்கு வகிக்க முடியும். உங்கள் பங்கினை நீங்கள் பின்வரும் வழியில் ஆற்றலாம்:

- பனியகற்றல் நடைபெறும்போது உங்கள் கார்களைத் தெருக்களில் நிறுத்தாதீர்கள் - இது நகரம் தெருக்களை முறையாகவும் பாதுகாப்பாகவும் அகற்ற உதவும். வாகனில் ஆண்டின் எந்த நேரத்திலும் நள்ளிரவு 2 மணி முதல் விடிகாலை 6 மணி வரை தெருவில் வாகனம் நிறுத்த அனுமதியில்லை. நகர வாகன நிறுத்தத் துணை விதிகளில் சுட்டிக்காட்டியபடி (PDF), பனியகற்றல் செயல்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்கும்படி தெருவில் வாகனம் நிறுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது. மீறலில் கண்டறியப்படும் வாகனங்களுக்கு $85 அபராதம் அல்லது உரிமையாளரின் செலவில் இழுத்துச் செல்லப்படும்.
- உங்கள் சொத்தினை ஒட்டியுள்ள பனி மற்றும் பனிக்கட்டிகளை ஓர நடைபாதைகளில் இருந்து அகற்றுவது, நகரத்தின் பனியகற்றல் துணைவிதிகள் 227-2022இன்படி (PDF) அவை தொடர்ந்து பத்திரமாக இருக்க உதவுகிறது.
- கழிவு சேகரிப்பு நாட்களில், கழிவுக் கூடைகளை விளிம்பிலிருந்து உங்கள் வண்டிப்பாதையின் வலதுபுறத்தில் தோராயமாக ஒரு மீட்டர் தூரத்தில் முடிந்த இடத்தில் (வீட்டைப் பார்த்த நிலையில்) வைக்கவும். அவற்றை ஒருபோதும் பனிக்குவியல்களுக்கு மேல் அல்லது பின்னால் வைக்கக்கூடாது.
- தீயணைப்புக் குழாய் முனையை சுத்தமாக அணுகக்கூடியபடி வைத்திருக்கவும் (சுற்றிலும் ஒரு மீட்டர் தூரம்). தடைப்பட்ட, மூடப்பட்ட அல்லது அணுகச் சிரமமான தீயணைப்புக் குழாயினால் அவசரகால தீயணைப்புக்குத் தடை ஏற்படலாம்.
- உங்கள் சொத்துக்கு அருகிலுள்ள வடிநிலங்களும் சிறுபாலங்களும் பனி, பனிக்கட்டி மற்றும் குப்பைக்கூளமின்றி இருக்க உதவுங்கள். இது வெப்ப ஏற்ற இறக்கங்களின்போது வெள்ள அபாயத்தைத் தடுக்க உதவும்.
- பனியகற்றும் குழுவுக்குத் தடையாய் இருக்கக்கூடிய அல்லது ஆபத்தான எதையும் உங்கள் சொத்திலிருந்து அகற்றுங்கள். நகரத்தின் அத்துமீறல் துணைவிதி 034-2017-இல் (PDF) குறிப்பிட்டுள்ளபடி இதில் வேலி, அலங்காரக் கற்கள், பானைகள்,

பறவைக் குளியல் கிண்ணங்கள், அறைகலன்கள் மற்றும் ஏனையவை போன்ற நில அமைப்பு அம்சங்கள் இதில் அடங்கும்.. இந்தப் பொருட்கள் ஓர நடைபாதையிலிருந்து 30 சென்டிமீட்டருக்குள் (12 அங்குலங்கள்) அல்லது தெரு விளிம்பிலிருந்து ஒரு மீட்டருக்குள் (மூன்றரை அடி) இருக்கக்கூடாது.
- வாரியெடுத்த பனியை எங்கே இடவேண்டும் என்பதில் கவனம் செலுத்தவும். ஒன்டாரியோ நெடுஞ்சாலைப் போக்குவரத்துச் சட்டம் மற்றும் நகரத்தின் குவித்தல் துணைவிதி 103-2020இன்படி சாலையில் பனி அல்லது பனிக்கட்டியைக் கொட்டுவது சட்ட விரோதம். இது நீங்கள் வாடகைக்கு அமர்த்தும் தனியார் ஒப்பந்ததாரர்களுக்கும் பொருந்தும்!
- அனைத்து வாகன மேற்பரப்புகளிலிருந்தும் ஓட்டத் துவங்கும் முன்பாக பனியை அகற்றவும். பனியகற்றல் மற்றும் உப்பிடும் சாதனங்களிலிருந்து பாதுகாப்பான தூரத்தைப் பேணவும்.

**தகவல் அறிந்திருங்கள்!**

எங்கள் பனிக்காலப் பராமரிப்புத் திட்டம் குறித்த மேலும் தகவல்களுக்கு, வருகை தாருங்கள் vaughan.ca/**snow**. கூடுதல் விபரங்களுக்கும் வாகனின் பனிக்காலச் செயல்பாடுஅக்ள் குறித்த புதிய தகவல்களையும் பெற:
- SNOW உதவி எண்ணை 905-879-SNOW (7669) என்ற எண்ணில் அழைக்கவும் அல்லது snow@vaughan.ca என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும்.
- நகர அதிகாரப்பூர்வ கார்பரேட் சேனல்களை X, Facebook, Instagram, LinkedIn மூலம் பின்தொடருங்கள்.
- வாகன் செய்திகளுக்கு சந்தாதாரர் ஆகுங்கள்.

**மேற்கோள்**

”பனிக்கால வானிலை எதிர்பாராததாக இருப்பினும், இயற்கை அன்னை நம் பாதையில் வீசும் எதற்கும் நமது பிரத்யேகப் பொதுப்பணி அலுவலர்கள் தயாராக உள்ளனர். பனியகற்றுதல் மற்றும் உப்பிடுதலில் இருந்து உப்புக் கரைசலிடல் மற்றும் பனி வாருதல் – நமது குழுவினர் பனிக்காலத்தின்போது நமது சமூகம் எங்கு செல்ல வேண்டும் என்பதை உறுதி செய்வதற்காக ஆண்டு முழுதும் தயார் செய்து கொள்கின்றனர். இந்த முயற்சிகளில் பங்கேற்கும் வாகன் நகரத்தின் பனி வீரர்களின் அர்ப்பணிப்புக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். நமது குடியிருப்பாளர்களின் வாழ்க்கையில் அர்த்தமுள்ள மாற்றத்தை நீங்கள் செய்கிறீர்கள். நமது சாலைகளையும் ஓர நடைபாதைகளையும் பனியும் பனிக்கட்டியும் இன்றி பனிக்காலம் முழுவதும் வைத்திருப்பதற்கு நாங்கள் நன்றியுடையவர்களாக இருக்கிறோம்.”
– மேயர் ஸ்டீவன் டெல் டூக்கா

**சுருக்கமான தகவல்கள்**

- வாகன் நகரம் உயர்மட்ட பனிப் பராமரிப்புச் சேவைகளை குடியிருப்பாளர்களுக்கு அளிக்கிறது. அது பனிக்கட்டியைக் குறைப்பதாய் இருந்தாலும் சாலைகளில் பனியை அகற்றுவதானாலும் அல்லது நடைபாதைகளில், ஓர நடைபாதைகள், சாலையோரத் தடுப்புகளில் இருந்து அகற்றுவதாயினும் நகர அணியினர் வானிலை எப்படி இருந்தாலும் வாகன் முழுவதும் ஒவ்வொருவரும் பத்திரமாகப் பயணிக்க உறுதிகொண்டுள்ளனர்.
- நகரம் 230க்கும் மேற்பட்ட வாகன அணிவரிசையைக் கொண்டுள்ளது - இதில் உப்பிடல்/பனியகற்றல் அலகுகள், சாலையோரத் தடுப்பு எந்திரங்கள், ஓர நடைபாதை எந்திரங்கள், பனியகற்றல் மற்றும் உப்பிடல் வசதிகொண்ட பிக் அப் டிரக்குகள், முட்டுச்சந்துகளைச் சுத்தப்படும் எந்திரங்கள் மற்றும் பனி எதிர்ப்பு அலகுகள் அடங்கும் - இது குடியிருப்பாளர்களுக்கு உயர்தர பனிக்காலச் சேவைகள் கிடைப்பதை நிச்சயிக்கிறது. 2,200 கிலோமீட்டருக்கும் நீளத்துக்கும் அதிகமான சாலைகள், 1,200 கிலோ மீட்டருக்கும் அதிகமான ஓர நடைபாதைகள், பூங்கா நடைபாதைகள், நகரத்துக்குச் சொந்தமான 63 கட்டிடங்களுக்குச் சேவைபுரிய இந்த உபகரணத்தை நகரம் பயன்படுத்துகிறது.

**மேலும் அறிய**

- வாகன் நகரத்தின் பனிக்கால பராமரிப்பு இணையப் பக்கம்

-30-

**வாகன் குறித்து:** வாகன் நகரம் 344,412க்கும் மேற்பட்ட மக்கள்தொகையுடன் கனடாவின் மிக வேகமாக வளர்ந்துவரும் நகரங்களுள் ஒன்று. 1991இல் தொடங்கப்பட்ட வாகனில் கான்கார்டு, கிளெய்ன்பர்க், மேப்பிள், தோர்ன்ஹில், வுட்பிரிட்ஜ் போன்ற சமூகங்கள் அடங்கும். கலாச்சார பன்முகத்தன்மை கொண்ட நகராட்சியானது யார்க் பிராந்தியம் மற்றும் டொரண்டோ பெரும்பாகப் பகுதியின் மையத்தில் அமைந்துள்ளது.

**ஊடகத் தொடர்பு:** எமிலி காரிப்பி, ஒருங்கிணைப்பாளர், ஊடகம் மற்றும் வெளியுறவுத் தொடர்புகள்
Communications, Marketing and Engagement Department
T. 647-544-0148 E. emily.gariepy@vaughan.ca

**vaughan.ca**